# செப்டம்பர் - 30 - சனி
## புனித ஜெரோம்

**முதல் வாசகம் : செப்போனியா2 : 5 – 9, 14 - 15**

கடற்கரையில் வாழும் இனத்தாராகிய கெரேத்தியரே! உங்களுக்கு ஐயோ கேடு! ஆண்டவரின் வாக்கு உங்களுக்கு எதிராய் உள்ளது் பெலிஸ்தியரின் நாடே! கானானே! எவனும் குடியிராதபடி நான் உன்னை அழித்து விடுவேன். இவ்வாறு அந்தக் கடற்கரை நாடு இடையரின் குடில்களுக்கும் ஆடுகளின் பட்டிகளுக்குமே ஏற்றதாகும்.அந்தக் கடற்கரை யூதாவின் குடும்பத்தவருள் எஞ்சியிருப்போர்க்கு உடைமையாகும் அங்கே அவர்கள் தங்கள் ஆடுகளை மேய்த்து, மாலையில் அஸ்கலோன் வீடுகளில் படுத்திருப்பார்கள் ஏனெனில் அவர்களுடைய கடவுளாகிய ஆண்டவர் அவர்கள்மீது அக்கறை கொண்டு, முன்னைய நன்னிலைக்கு அவர்களை உயர்த்துவார்.மோவாபின் பழிப்புரைகளையும் அம்மோனியரின் வசைமொழிகளையும் நான் கேட்டேன் அவர்கள் என் மக்களை இழித்துரைத்து, அவர்களின் நாட்டு எல்லைகளைக் குறித்து வீம்பு பேசியதையும் நான் கேட்டேன்.ஆதலால், படைகளின் ஆண்டவரும், இஸ்ரயேலின் வாழும் கடவுளுமாகிய நான் ஆணையிட்டுக் கூறுகின்றேன் மோவாபு சோதோமைப்போல் ஆகும் அம்மோனியர் கொமோராவைப்போல் ஆவர் இது உறுதி. இந்நாடுகள் காஞ்சொறி படரும் காடாகவும், உப்புப் பள்ளம் நிறைந்த பாழ்நிலமாகவும் என்றும் இருக்கும். என் மக்களில் எஞ்சியோர் அவர்களைக் கொள்ளையடிப்பர் என் மக்களுள் தப்பியோர் அவர்களை அடிமைகளாக்கிக் கொள்வர்.அங்கே மந்தைகளும் எல்லாவகை விலங்குகளும் படுத்துக் கிடக்கும் தூண்களின் உச்சியில் கூகையும் சாக்குருவியும் தங்கியிருக்கும் பலகணியில் அமர்ந்தவாறு ஆந்தை அலறும் நிலைக்கதவின்மேல் இருந்தவாறு காகம் கரையும் கேதுரு மர வேலைப்பாடுகள் அழிக்கப்படும். "நான் ஒப்புயர்வு அற்றவன்" என்ற கவலையின்றிக் களிப்புற்றிருந்த நகர் இதுதானோ? இப்பொழுது அது காட்டு விலங்குகளின் குகையாகி எவ்வளவு பாழாய்ப் போயிற்று! அதைக் கடந்துபோகும் ஒவ்வொருவனும் சீழ்க்கையடித்துக் கையசைக்கிறான்.

**பதில்பாடல் :** ஆயர் தம் மந்தையைக் காப்பது போல் ஆண்டவர் நம்மைக் காத்திடுவார்.

**நற்செய்தி : லூக்கா 9 : 43 – 45**

அக்காலத்தில் இயேசூ செய்த யாவற்றையும் பார்த்து எல்லாரும் கடவுளின் மாண்பைக் கண்டு மலைத்து நின்றார்கள். இயேசு செய்த யாவற்றையும் பார்த்து அனைவரும் வியப்படைந்தனர். அவர் தம் சீடர்களிடம்,"நான் சொல்வதைக் கேட்டு மனத்தில் வைத்துக் கொள்ளுங்கள். மானிடமகன் மக்களின் கையில் ஒப்புவிக்கப்படவிருக்கிறார்" என்றார்.அவர்கள் அவர் சொன்னதைப் புரிந்துகொள்ளவில்லை. அவர்கள் அதை உணர்ந்து கொள்ளாதவாறு அது அவர்களுக்கு மறைவாயிருந்தது. ஆயினும் அவர் சொன்னதுபற்றி அவரிடம் விளக்கம் கேட்க அஞ்சினார்கள்.

**தியானம் :** வாழ்க்கை என்பது பலருக்கு புரியாத புதிராக அமைந்திருக்கின்றது. எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கின்றது? நான் என்ன பாவம் செய்தேன்? கடவுள் என்னை மட்டும் ஏன் இப்படி சோதிக்கின்றார்? என்ற பல்வேறு கேள்விகளோடு மனித உள்ளங்கள் ஏக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கின்றன. இன்றைய பெரும்பாலோருடைய வாழ்க்கையானது சோகங்களும், வேதனைகளும், இழப்புக்களும், வெறுப்புக்களும் நிறைந்த கசப்பான ஒரு அனுபவமாகத்தான் போய்க்கொண்டிருக்கின்றது. இதற்குக் காரணம் சாத்தான் நம்முடைய அகக்கண்களை குருடாக்கி நமக்குள் இருக்கும் இறைவனை உணர முடியாமல் செய்ததுதான். "இவ்வுலகின் தெய்வம் நம்பிக்கை கொண்டிராதோரின் அறிவுக் கண்களை குருடாக்கிவிட்டது. எனவே அவர்கள் கடவுளின் சாயலாய் விளங்கும் கிறிஸ்துவின் மாட்சி பொருந்திய நற்செய்தியின் ஒளியைக் காணமுடிவதில்லை." (2கொரி.4:4) நம்முள் மறைந்திருக்கும் கடவுளின் மாட்சியை நாம் கண்டுணர முடியாத வண்ணம் பல்வேறு கவலைகளால், ஏமாற்றங்களால், வேதனைகளால், சோகங்களால் சாத்தான் நம்முடைய அகக்கண்களை மூடிவைத்திருக்கின்றான். எனவேதான் இன்றைய நற்செய்தி வாசகத்தில் இயேசு தன்னுடைய இறப்பினுடைய மாட்சியை பற்றிச் சொல்லும் போது சீடர்களால் அதனை புரிந்து கொள்ள முடியவில்லை. இன்றைய முதல்வாசகத்தில், அடிமைத்தனத்தில் வாழ்ந்த மக்களுக்கு ஆறுதல் சொல்லும் இறைவன் நான் என்றும் உங்களோடு இருக்கின்றேன். நீங்கள் துன்பத்தின் மத்தியில் தனியாக விடப்படவில்லை என்பதை தன்னுடைய வாக்குத்தத்தால் வெளிப்படுத்துகின்றார். "மகளே சீயோன் அகமகிழ்ந்து ஆர்ப்பரி, இதோ நான் வருகின்றேன், வந்து உன் நடுவில் குடிகொள்வேன் என்கிறார் ஆண்டவர்" (செக்.2:10). இதனைக் கண்டுணர்பவர்கள் மிகச் சிலரே! தங்களோடு உடன் பயணித்த இயேசுவை பார்க்கமுடியாதவாறு எம்மாவூஸ் சீடர்களின் கண்கள் சோகத்தினால், கவலையால் மறைக்கப்பட்டிருந்தது. (லூக்.24:13-31) இயேசு மறைநூலை விளக்கிச் சொல்லும் போது அவர்களுடைய உள்ளம் பற்றியெறிகின்றது அவர்களுள் இருந்த கவலைகள், சோகங்கள், ஏக்கங்கள் எல்லாம் இறைவார்த்தையினால் சுட்டெரிக்கப்பட்ட பிறகு அவர்களுடைய ஆன்மீகக் கண்கள் திறக்கப்படுகின்றது. "அப்போது மறைநூலைப் புரிந்துகொள்ளுமாறு அவர்களுடைய மனக்கண்களை இயேசு திறந்தார்" (லூக்.24:46). எம்மாவூஸ் சீடர்களைப்போல வாழ்க்கையின் பிரச்சனைகள் மத்தியிலும் நம்மோடு உடன் பயணிக்கும் இயேசுவைக் கண்டுகொள்ள இறைவார்த்தையினால் நம்மை நிறைத்துக்கொள்வோம். இருளின் மத்தியிலும் நம்பிக்கையின் ஒளியைக் காணுமாறு நம்முடைய அகக்கண்கள் ஒளியூட்டப் பெற ஒவ்வொருநாளும் நம்மை இறைவார்த்தையினால் நிரப்பிக் கொள்வோம். இயேசுவைக் கண்டுகொள்வோம்!